# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்
## அ.வ.எண்.201/2011

03.12.2018

**பிரதிவாதி தரப்பு சாட்சி 3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**8 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

8 ம் பிரதிவாதி தங்கராஜின் தந்தை பெயர் சென்னியப்பகவுண்டர் என்றால் சரிதான். சென்னியப்பகவுண்டர் 30.11.1992 தேதியில் 4.67 ஏக்கர் விஸ்தீரணம் பூமியை கிரயம் பெற்றுவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. மற்ற பாகஸ்தர்களுடன் வாய்மொழியாக நலம் திகடு கண்டு பாகம் பிரித்து 4.80 விஸ்தீரணம் பூமியை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்ததாகச் சொன்னால் எனக்குத் தெரியாது. பாகம் பிரித்துக் கொண்ட பூமியில் தேங்காய் களம் அமைத்தும், வீடு கட்டியும் 8 ம் பிரதிவாதி அனுபவித்து வந்ததாகச் சொன்னால் எனக்குத் தெரியாது. அந்த சொத்தை 25.6.2009 தேதியில் சென்னிப்பகவுண்டர் தனது மகனான 8 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாகச் சொன்னால் எனக்குத் தெரியாது. அந்த சொத்தில் இருக்கும் கட்டிடங்களுக்கு மின் இணைப்பு பெற்று தனிப்பட்டமுறையில் 8 ம் பிரதிவாதி அனுபவித்து வந்ததாகச் சொன்னால் எனக்குத் தெரியாது. நான் 2010 ம் ஆண்டு கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்ற சமயம் தாவா சொத்திற்கு வில்லங்க சான்று பெற்றுப் பார்த்தேன். கிரயம் பெறுவதற்கும் 20 வருடங்கள் முன்பிருந்து வில்லங்கம் பார்த்தேன் எந்த வில்லங்கமும் இல்லை என்று வந்தது. வில்லங்க சான்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. தாவாவிற்காக வில்லங்கம் பார்த்ததாக சொல்வதாகச் சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு முன்பேயே 2000 ம் ஆண்டிலிருந்து தாவா சொத்துக்கள் தனிப்பட்ட முறையில் சைட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்து வந்ததாகச் சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் எத்தனை பேர் தனிப்பட்ட முறையில் செக்குபந்திக்குள் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் லோகநாதன் என்பவர் மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்து வந்தார் என்றால் அவ்வாறு விற்பனை செய்ததாகத் தெரியவரவில்லை. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வளவு பங்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியாது.

நான் பு.ஏ.2.19 ½ பூமியை கிரயம் பெற்றுள்ளேன். எந்த காலை எண்ணில் மேற்படி பூமியை கிரயம் பெற்றேன் என்றால் எனக்குத் தெரியாது மொத்தம் 11 காலை எண்கள். நான் கிரயம் பெறும் போது யார் யார் அனுபவத்தில் இருந்தார்கள் கிரயம் கொடுத்தவருக்கு எவ்வளவு பாத்தியம் தாவா சொத்தில் என்னென்ன வில்லங்கங்கள் உள்ளது என்பதைப் பார்க்காமல் கிரயம் பெற்று விட்டு தற்போது பொய் சங்கதியைச் சொல்லி எதிர்வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. யாரிடம் கிரயம் பெற்றேனோ அவரிடம் சென்று எனக்கு கிரயம் கொடுத்த பாகத்தை பிரித்து தருமாறு கேட்க வேண்டுமே தவிர இந்த தாவாவில் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக யார் யார் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள், எவ்வளவு விஸ்தீரணம் அனுபவித்து வருகிறார்கள், தனிப்பட்ட முறையிலா அல்லது பொதுவிலா என்பதை எல்லாம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கிரயம் வாங்குவதற்கு முன்பாக பட்டா சிட்டா ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்பதை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நேர்மையான நல்லெண்ண கிரயதாரர் செயல்படக்கூடிய வகையில் செயல்படாமல் தற்போது பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடாதது என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் தன்னுடைய பங்கை அனுபவிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மற்ற பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒம்/ கா.பாரதி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.